சென்னை-600 005

## சுருக்கம்

பணியமைப்பு – நகராட்சிகள் – இந்திய மக்கள்தொகை திட்டம் 5 மற்றும் ஓ.ஆர்.எஸ். திட்டத்தில் பணிபுரிந்த பணியாளர்களை, நகராட்சிப்பணி விதிகளின் கீழ் கொண்டு வருதல் – ஆணையிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1(2)) துறை

அரசாணை(நிலை) எண்.35        நாள்:07.03.2008.

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை) எண்.136, சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறை, நாள் 31.03.2001.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.65841/2001/எச்.3, நாள் 03.02.2006, 28.09.2006, 24.01.2007, 26.02.2007 மற்றும் 10.07.2007.

----

**ஆணை:–**

தமிழ்நாட்டில் உலக வங்கி நிதியுதவியுடன் இந்திய மக்கள்தொகை திட்டம்–5 1988ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 31.07.1996 அன்று முடிவுக்கு வந்தது. இத்திட்டம் முடிவடைந்த பின்னரும் இத்திட்டத்திற்காக தோற்றுவிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களை தொடருவது மாநில அரசின் பொறுப்பாகும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. பொதுமக்களுக்கு அளித்து வந்த மருத்துவ சேவையை தடையின்றி வழங்க எண்ணி, இத்திட்டத்தின்கீழ் உள்ளாட்சி அமைப்புகளுக்காக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் தொடரப்பட்டது. இப்பணியிடங்ளுக்காகும் செலவினத்தை மாநில அரசும் உள்ளாட்சி அமைப்புகளும் 2 : 1 என்ற விகிதத்தில் மேற்கொண்டுள்ளது. இதனால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்பட்ட நிதிச்சுமையை கருத்திற்கொண்டு, அரசு தனது 31.03.2001 நாளிட்ட சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, அரசாணை(நிலை) எண்.136–ல், 5 மாநகராட்சிகளுக்கும் மற்றும் 24 நகராட்சிகளுக்கும் இத்திட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட 1049 பணியிடங்களில், 832 பணியிடங்களை மட்டும் மறு நிர்ணயம் செய்து தொடர அனுமதித்துள்ளது. இவற்றில், 720 பணியிடங்கள், 24 நகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. இந்திய மக்கள்தொகை திட்டம்–5 தோற்றுவிக்கப்பட்டது முதல் சுமார் 17 ஆண்டுகளாக தொடர்ந்து இத்திட்டத்தில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பணி விதிகள் ஏற்படுத்தப்படாததால், இத்திட்டப் பணியாளர்களை பணிவரன்படுத்துதல், ஊதிய உயர்வு வழங்குதல், தேர்வு நிலை வழங்க முடியாத நிலை உள்ளது. மேலும், பல நகராட்சிகளில் தணிக்கைத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப் பணியாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். மாநகராட்சிகளில் உள்ள இந்திய மக்கள்தொகை திட்டம் 5 திட்ட பணியிடங்களை பணிவிதிகளின் கீழ் கொண்டு வந்தது போன்று நகராட்சிகளில் உள்ள இந்திய மக்கள்தொகை திட்டம்–5 திட்டபணியிடங்களையும்

கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பணிவிதிகளின்கீழ் கொண்டு வரலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்:-

01. மருத்துவ அலுவலர் / பெண் மருத்துவ அலுவலர்
02. பொது சுகாதார செவிலியர் / தலைமைச் செவிலியர்
03. சுகாதாரப் பார்வையாளர்
மருத்துவ அலுவலர், செவிலியர், சுகாதாரப் பார்வையாளர் ஆகிய பணியிடங்கள் தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி விதிகள் 1970-ல் இடம் பெற்றிருப்பதால், மேற்குறிப்பிட்ட பணியிடங்களையும் தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி விதிகள் 1970-ன்கீழ் வகை 2 (category 2) ஆக கொண்டு வரலாம்.

04. பல்நோக்கு சுகாதாரப் பார்வையாளர் / ஏ.என்.எம்

தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி விதிகள் 1970-ல் வகுப்பு 11(i)-ல் உள்ள மகப்பேறு உதவியாளர் பணியிடமும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடமும் ஒரே ஊதிய விகிதத்தில் ஒரே மாதிரியான தகுதிகளைக் கொண்டுள்ளதால் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்தினை தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி விதிகள் 1970-ல், வகை 11(i)-ல் சேர்க்கலாம்.

05. பெண் உதவியாளர் (Female Attender)
06. வார்டு உதவியாளர் (Ward Attender)
பெண் உதவியாளர் மற்றும் வார்டு உதவியாளர் பணியிடங்களுக்கான ஊதிய விகிதம் கடைநிலை பணியினை ஒத்து இருப்பதால் இதே போன்று தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி விதிகள் 1970-ல், வகை 12-ல் உள்ள உதவியாளர் (குடும்ப நலம்) பணியிடத்துடன் சேர்க்கலாம்.

07. அறுவை அரங்க உதவியாளர் (Operation Theatre Assistant / Attender)
அறுவை அரங்க உதவியாளர் பணியிடத்திற்கு ஒத்த பணியிடம் ஏதும் நகராட்சி பணி விதிகளில் இல்லாததால் இப்பணியிடத்தினை தமிழ்நாடு நகராட்சி மருத்துவப் பணிவிதிகள் 1970-ல் 11(iii) என எண்ணிட்டு சேர்க்கலாம்.

08. தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்
தொடர்ந்து 17 ஆண்டுகளாக பணிபுரிந்துவரும் தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்கள் தற்பொழுது இந்திய மக்கள்தொகை திட்டம்-5 திட்டப் பணிகள் முடிவடைந்த நிலையில், பொது பிரிவில் எழுத்தர் பணியிடங்களையே கவனித்து வருவதாலும், தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் மற்றும் பொது பிரிவு உதவியாளர்களுக்கு ஊதிய விகிதத்தில் வேறுபாடு இல்லாததால் நிதி இழப்பு ஏதும் இல்லாததாலும் தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களை உதவியாளர் பணியிடங்களாக தமிழ்நாடு நகராட்சி பொது பணி விதிகள் 1970-ல், வகை 5-ல் உதவியாளர்களுக்கு இணையாக கொண்டு வரலாம்.

4. திருநெல்வேலி மாநகராட்சியில் இந்திய மக்கள்தொகை திட்டம் 5-ன் கீழ் பணிபுரிந்த பணியாளர்களை தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதார சார்நிலை பணிகள் 1996 மற்றும் தமிழ்நாடு மாநகராட்சி பொது சுகாதாரப் பொது விதிகள் 1996-ன் கீழ் கொண்டு வந்து 11.11.2005 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை(நிலை) எண்.156-ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், நகராட்சியில் பணிபுரியும் இந்திய மக்கள்தொகை திட்டம்-5 ன்கீழ் பணிபுரிந்த பணியாளர்களை

.3..

நகராட்சிப்பணி விதிகளில் சேர்ப்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்து, இப்பணியிடங்களை கீழ்க்கண்டவாறு நகராட்சிப்பணி விதிகளில் சேர்த்து ஆணையிடுகிறது:–

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் | வகை 2 [category 2] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 2. | பொது சுகாதார செவிலியர் | வகை 5(a) [category 5(a)] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 3. | தலைமை செவிலியர் | வகை 5(a) [category 5(a)] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 4. | சுகாதாரப் பார்வையாளர் | வகை 5(a) [category 5(a)] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 5. | பல்நோக்கு சுகாதாரப் பார்வையாளர் | வகை 11 (ii) [category 11(ii)] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 6. | பெண் உதவியாளர் | வகை 12 [category 12] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 7. | வார்டு உதவியாளர் | வகை 12 [category 12] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 8. | அறுவை அரங்க உதவியாளர் | வகை 11 (iii) [category 11(iii)] தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் 1970 |
| 9. | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | வகை 4, பிரிவு 5 [category 4 class V] தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகள் 1970 |

5. நகராட்சிகளில் இந்திய மக்கள்தொகை திட்டம் 5–ன் கீழ் பணிபுரிந்த பணியாளர்களை, தமிழ்நாடு நகராட்சிப்பணி விதிகளில் சேர்த்து, மேலே பத்தி 4–ல் ஆணையிடப்பட்டது குறித்து தமிழ்நாடு நகராட்சி மருத்துவ பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளுக்கு திருத்தங்கள் தனியே வெளியிடப்படும்.

6. தமிழ்நாடு நகராட்சிப்பணி விதிகளில் உட்புகுத்தப்பட்ட மேற்சொன்ன பணியாளர்களின் பணி வரன்முறை, ஆண்டு ஊதிய உயர்வு, விடுப்புப் பயன்கள் ஆகியவற்றை அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 600 108.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள். (வழி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5)

நகல்:–
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநுமு.2) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்